

# The Birth of Jesus

## இயேசுவின் பிறப்பு.

### லூக்கா 2 : 1–4

ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்கள் தான் முதலில் இயேசுவினுடைய பிறப்பின் நற்செய்தியை முதலில் கேட்ட ஜனம் ஆவார்கள். அவர்கள் வயல் வெளியில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது வானத்திலே பிரகாசமுள்ள ஒரு வெளிச்சத்தையும், தூதனையும் கண்டார்கள். அவர்கள்மிகவும் பயந்தார்கள், ஆனால் தூதன் அவர்களை பார்த்து பயப்படாதிருங்கள் என்று சொன்னார்.

தூதன் அவர்களுக்காக ஒரு நற்செய்தியை கொண்டு வந்தார். அந்த நற்செய்தி அவர்களுக்கு மாத்திரம் அல்ல. ஆனால் சகல ஜனத்தாருக்கும், நம் எல்லாருக்காவும் என்று அர்த்தமாகும், சிறிய பிள்ளைக்கும் கூட. ஒரு குழந்தை பெத்லஹேமில் பிறந்திருக்கிறது. இந்த குழந்தை ஒரு விஷேசித்த சிறப்பு மிக்க குழந்தை அவர் இரட்சகர், ஆண்டவராகிய கிறிஸ்து என்று தூதன் அவர்களுக்கு சொன்னார். சகல ஜனத்தாருடைய பாவங்களையும் நீக்குபவர். பிள்ளையை துணிகளில் சுற்றி புல்லனையில் முன்னணையிலே கிடத்தியிருக்க காண்பீர்கள். இதவே உங்களுக்கு அடையாளம். (புல்லனை என்பது மரத்தால் செய்யப்பட்ட ஒரு பெட்டி மிருகங்கள் சாப்பிடுவதற்கு வைக்கோல் வைக்கப்பட்டிருக்கும்) பிறகு பரமசேனையின் திரள் வானத்திலே தோன்றி பரலோகத்தில் உள்ள தேவனைத் துதித்துப் பாடினார்கள். மேய்ப்பர்கள் சென்று மரியாளையும், மரியாளின் மடியில் இருந்த குழந்தை இயேசுவையும், யோசேப்பையும் கண்டார்கள்.

அவர்கள் குழந்தை இயேசுவை பணிந்து கொண்டு, தொழுது கொண்டு பிறகு திரும்பி வந்து தாங்கள் கேட்ட, பார்த்த, சுவிஷேசத்தை உலகமெங்கும் பிரசித்தம் பண்ணினார்கள்.

## ஜெபம்

உம்முடைய மகனாகிய இயேசுவின் பிறப்பின் மூலம் எங்களுக்கு சந்தோஷம் உண்டாக்கினமைக்கு நன்றி கடவுளே! அவர் எங்கள் இரட்சகராயிருப்பதற்காக நாங்கள் அவரில் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். மற்றவர்களுக்கு அவரைக் குறித்துச் சொல்ல விரும்புகிறோம். ஆமென்.

### வளர்ந்த பிள்ளைகளுக்குரிய வேத வசனம் மனப்பாட பகுதி லூக்கா 2:10–11

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.